பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 14 ஞாயிற்றுக்கிழமை 02.10.2022 கதிர் 218

## இலங்கையின் பிரபல நடிகர் தர்ஷன் தர்மராஜ் திடீர் சாவு!



இலங்கையின் பிரபல நடிகர் தர் ஷன் தர்மராஜ் தனது 41ஆவது வயதில் மரணமடைந்துள்ளார். அவரது மரணத்துக்கான சரியான காரணம் ☞2

# பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு எதிராக தங்காலையில் திரண்ட மூவின சமூகத்தினர்

## தடைகளைத் தகர்த்து வெற்றியுடன் நடந்தேறிய கையெழுத்துப் போராட்டத்தின் இறுதி நிகழ்வு







இலங்கை மக்களை வதைக்கும் கொடிய பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முற்றாக இரத்துச் செய்யக் கோரி நாடளாவிய ரீதியில் ஊர்தி வழியாகச் சென்று கையெழுத்துத் திரட்டும் போராட்டத்தின் இறுதி நாள் நிகழ்வு ☞2

## துமிந்தவின் பதவியையும் பறித்தெடுத்தார் மைத்திரி



சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியிலிருந்து துமிந்த திஸாநாயக்க நீக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், கட்சியின் மத்திய குழு உறுப்பினர் மற்றும் அநுராதபுரம் மாவட்டத் தலைவர் பதவிகளில் இருந்தும் அவர் தூக்கப்பட்டுள்ளார். ☞2

## சு.கவை வீழ்த்த முயற்சிப்போர் நிச்சயம் தோற்கடிக்கப்படுவர்

### தயாசிறி ஆவேசக் கருத்து



சிறிலங்கா சுதந்திரக் கட்சியை வீழ்த்த முயற்சிப்போர், இறுதியில் அரசியல்ரீதியில்மண்டியிடவேண்டிய நிலை ஏற்படும் என்பதே வரலாறு. ராஜபக்ஷக்களுக்கு நேர்ந்த கதி ☞2

## யாழில் ஹெரோய்னுடன் பல்கலை மாணவன் கைது

உயிர்கொல்லி ஹெரோய்ன் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த சந்தேகத்தில் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக மாணவனைக் கைது செய்துள்ளதாக யாழ். வட்டுக்கோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வட்டுக்கோட்டை கிழக்குப் பகுதியிலுள்ள தனது வீட்டில் ☞2

# வடக்கின் நிலைமை தொடர்பில் நீலிக்கண்ணீர் வடிக்கும் பிரதமர்



வடக்கு மாகாணத்தில் ஹெரோய்ன் போதைப் பொருள் பாவனை திடீரென அதிகரித்தமை மிகவும் கவலையளிக்கின்றது என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடளாவிய ரீதியில் போதைப்பொருள் விற்பனையாளர்களையும், பாதாள உலகக் குழுவினரையும் தேடிக்கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் ☞2

## குடாநாட்டில் ஹெரோய்ன் பிரதான வியாபாரி கைது

உயிர்கொல்லிஹெரோய்ன் போதைப் பொருளை யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரும் பிரதான வியாபாரி ஒருவரை சந்தேகத்தில்யாழ். பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ். பொம்மைவெளிப் பகுதியைச் சேர்ந்த 52 வயதான நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு உயிர்கொல்லிபோதைப்பொருளான ஹெரோய்ன் எடுத்து வருகின்றார் என்று பொலிஸ் ☞2

## குறி தவறிய துப்பாக்கிச்சூட்டில் யுவதி ஒருவர் பரிதாப மரணம்!



பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகம் குறி தவறியதில் அனுராபுரத்தில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பஸ்ஸில் பயணித்த யுவதி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று அதிகாலை தங்கோவிட்ட பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

தங்கோவிட்ட பிரதேசத்தில் கொள்ளைச் சம்பவம் ஒன்றில் ஈடுபடச் சென்றிருந்த கொள்ளையர்கள் சிலரை இலக்கு ☞2

# யாழ்ப்பாணத்தில் காந்தி ஜெயந்தி நிகழ்வு











காந்தி ஜெயந்தியை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் இன்று நிகழ்வுகள் நடைபெற்றன.

யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ். வைத்தியசாலை வீதியிலுள்ள மகாத்மா காந்தியின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்வில் இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன், யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபர் க.மகேசன், நாடாளுமன்ற ☞2

## குடாநாட்டில்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக முன்னெடுக் கப்பட்ட சுற்றிவளைப்பிலேயே கைது செய்யப்பட்டுள்ளார்.

## இலங்கையின்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் இவர் மரணமடைந்தார் என்று அவரது குடும்பத் தகவல்கள் உறுதிப்படுத்தின.

## சு.கவை..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்குச் சான்றாகும். - இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

அத்துடன், 1956ஆம் ஆண்டுக்குப் பின்னர், இரண்டாவது விடுதலைப் போராட்டம் சுதந்திரக் கட்சி தலைமையிலேயே ஆரம்பமாகும் எனவும் அவர் சூளுரைத்தார்.

அதேவேளை, ஆட்சியைக் கைப்பற்றும் சக்தியாக ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மீண்டும் பலமடையும் எனவும் தயாசிறி நம்பிக்கை வெளியிட்டார்.

## துமிந்தவின்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசுடன் இணைந்து அமைச்சுப் பதவியைப் பெறுவதற்குத் துமிந்த திஸாநாயக்க தீர்மானித்துள்ள நிலையிலேயே, சுதந்திரக் கட்சி இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

சுதந்திரக் கட்சி ஏற்பாடு செய்த நிகழ்வில் பங்கேற்காமல், சந்திரிகா அம்மையார் தலைமையில் நடைபெற்ற பண்டாரநாயக்க நினைவு தின நிகழ்விலும் துமிந்த திஸாநாயக்க பங்கேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழில்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹெரோய்னை பல்கலைக்கழக மாணவன் வைத்திருக்கிறார் என்று பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு பொலிஸார் சென்றுள்ளனர்.

அவரிடமிருந்து 750 மில்லி கிராம் ஹெரோய்ன் கைப்பற்றியதாகவும், சந்தேகத்தில் 22 வயதான பல்கலைக் கழக மாணவனைக் கைது செய்ததாகவும் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

## குறி தவறிய..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்துப் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

பொலிஸாரின் குறி தவறியதில் பஸ்ஸில் பயணித்த யுவதி துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் பலியாகியுள்ளார்.

கொள்ளையர்கள் சிலர் தங்கோவிட்டவில் உள்ள மதுபான விற்பனை நிலையத்தில் கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர் என்று பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதையடுத்து அங்கு சென்ற பொலிஸார் கொள்ளையர்களை முற்றுகையிட்ட போது, கொள்ளையர்கள் தாம் வந்த காரில் தப்பிச் சென்றுள்ளனர். பொலிஸார் கொள்ளையர்களைப் பின் தொடர்ந்து சென்று துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது ஒரு துப்பாக்கி வேட்டு தவறுதலாக அனுராதபுரத்தில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பஸ்ஸில் பட்டுள்ளது.

குறி தவறிய இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இலக்காகி, அனுராதபுரத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த காலி பிரதேசத்தைச் சேர்ந்த யுவதி உயிரிழந்துள்ளார்.

கொள்ளையர்கள் தப்பிச் சென்ற காரை அவர்கள் வத்தளைப் பிரதேசத்தில் கைவிட்டுச் சென்றுள்ளனர். அதனைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அதேவேளை, சம்பவத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான இரண்டு கொள்ளையர்கள் ராகமை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

## யாழ்ப்பாணத்தில்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்கள், யாழ். மாநகர பிரதி மேஜர், யாழ். மாநகர ஆணையாளர், சமூகப் பிரதிநிதிகள், இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள் மற்றும் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் பிரதிநிதிகள்எனப்பலரும்கலந்துகொண்டனர்.

இதன்போது காந்தீயம் ஏடு யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபர் க.மகேசனால் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன் முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

மேலும் மகாத்மா கந்திக்கு மிகவும் பிடித்தமான 'ரகுபதி ராகவ ராஜாராம்' என்ற பாடலும் மாணவர்களால் இசைக்கப்பட்டது.

## வடக்கின்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் முப்படையினர் களமிறங்கியுள்ளனர்.

இந்நிலையில், வடக்கில் ஹெரோய்ன் போதைப்பொருளை விற்பனை செய்பவர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படும்.

முதலில் போதைப்பொருள் விற்பனையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தால்தான் போதைப் பொருள் பாவனையை முடி வுக்குக் கொண்டுவர முடியும் - என்றார்.

## பயங்கரவாதத்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூவின சமூகத்தினரின் பேராதரவுடன் இன்று அம்பாந்தோட்டை - தங்காலையில் நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அரசியல்வாதிகள், சர்வமதத் தலைவர்கள், மூவின மக்கள் எனப் பலரும் பங்கேற்றனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி, சர்வஜன நீதி அமைப்பு, தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்களின் கூட்டமைப்பு ஆகியவற்றின் ஏற்பாட்டில் காங்கேசன்துறையிலிருந்து அம்பாந்தோட்டை வரையான போராட்டத்தை காங்கேசன்துறை - மாவட்டபுரத்தில் ஆரம்பித்து வைத்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, அந்தக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் சி.வி.கே.சிவஞானம், கல்விசார் தொழிற்சங்கப் பிரமுகர் ஜோசப் ஸ்டாலின் போன்றோரும் இன்று தங்காலையில் நடைபெற்ற இறுதி நிகழ்விலும் பங்கேற்றனர்.

கடந்த செப்டெம்பர் மாதம் 10ஆம் திகதி காங்கேசன்துறையில் இருந்து புறப் பட்ட கையெழுத்து சேகரிக்கும் ஊர்தி இலங்கையின் 25 மாவட்டங்களிலும் மக்களின் கையெழுத்துக்களைச் சேகரித்த பின்னர் இன்று அம்பாந்தோட்டை மாவட்டத்தின் தங்காலையில் தனது செயற்பாட்டைத் தடைகளைத் தகர்த்தெறிந்து வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளது

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஜெனிவா வாக்களிப்பு வியாழன்

உள்ளூர் அரசியலில் கவனம் செலுத்திய பலரும் இந்த வாரம் ஜெனிவாவில் இலங்கை மோசமான நெருக்கடியைச் சந்திக்க இருப்பதை மறந்து விட்டனர்.

இலங்கைக்குஎதிராகஇதுவரைவந்தபிரேரணைகளில் காட்டமானது இப்போது ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு வருகிறது.

இலங்கைக்கு எதிரான பிரேரணையில் இம்முறை பல புதிய முக்கிய விடயங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

நாட்டுக்குப் பொருளாதாரப் பேரிழப்பை ஏற்படுத்திய குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் – அதுவும் குறிப்பாக முன்னைய ஆட்சித் தரப்புக்கு எதிராகக் கடந்த ஏப்ரலில் மக்கள் போராட்டங்கள் வெடித்த பின்னர் அந்தப் போராட்டங்களில் ஈடுபட்டோருக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் அடக்குமுறைகள் – மிக மோசமான பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைத் தொடர்ந்தும் கையாளுதல், நல்லிணக்கம் மற்றும் அதிகார பகிர்வை ஏற்படுத்தாதமை என்று இலங்கைக்கு நெருக்கடி தரும் பல விவகாரங்கள் இம்முறை பிரேரணைக்குள் தாராளமாகப் புகுத்தப்பட்டிருக்கின்றன.

யுத்த காலத்தில் இடம்பெற்ற யுத்த குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் போன்ற 30/01, 46/01 தீர்மான விடயங்களுக்கு மேலதிகமாக இப்போது 51/01 தீர்மானமாக நிறைவேற இருக்கும் பிரேரணையில் அரசுக்குச் சூடு வைக்கும் பல புதிய பிரச்சினைகள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த முறை இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு கவுன்ஸிலில் வாக்களிக்கும் அங்கத்துவ நாடுகள், வாக்களிக்க உரிமையற்ற அங்கத்துவ நாடுகள் என மொத்தம் 40 நாடுகள் அனுசரணைப் பங்கு வகித்தன.

இம்முறை இதுவரை பிரேரணைக்கு அனுசரணைப் பங்கு வகிப்பதற்கு 26 நாடுகள் முன் வந்திருக்கின்றன. அதில் பத்து நாடுகள் வாக்களிக்கும் தகைமை உடையவை. தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணை வடிவத்துக்கு நாளை பிற்பகல் வரை மாற்றங்களுக்கு இடம் அளிக்கப்படுகின்றது. அதன் இறுதி வடிவம் பெறப்பட்டதும் அனுசரணைப் பங்கு வகிக்கப் பெயர் பதியும் நாடுகளின் எண்ணிக்கையும் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எதிர்வரும் வியாழக்கிழமை ஆறாம் திகதி பிற்பகலில் பிரேரணை வாக்கெடுப்புக்கு வரும். அது எந்த வித விக்கனமும் இன்றி நிறைவேறும் என்பதில் அனுசரணை நாடுகள் மிகத் தெளிவாக இருக்கின்றன.

கடந்த முறை 46/01 தீர்மானத்தை வாக்களிக்கும் உரிமை உள்ள 47 நாடுகளில் 22 நாடுகள் ஆதரித்தன. சரி அரைவாசி பங்குக்கு 11 நாடுகள் எதிர்த்து வாக்களித்தன. இந்தியா உட்பட 14 நாடுகள் வாக்களிப்பில் பங்குபற்றவில்லை.

வாக்களிக்காத 14 நாடுகளையும், எதிர்த்து வாக்களித்த 11 நாடுகளையும் ஒன்று சேர்த்து, ஆகவே 25க்கு 22 என்ற முறையில் இலங்கை வென்று விட்டது என்று இலங்கைத் தரப்பில் அப்போது ஜெனிவாக் கூட்டத்தில் பங்குபற்றிய அப்போதைய வெளிவிவகார அமைச்சர் – இப்போதைய பிரதமர் – தினேஷ் குணவர்த்தனா விளக்கம் கூறினார். அதற்கு முன்னரும் ஒரு தடவை வெளிவிவகார அமைச்சராக இருந்த பேராசிரியர் ஜி.எல்.பீரிஸும் இதே விதண்டாவாதக் கணக்கைக் காட்டியிருந்தார்.

ஆனால் இம்முறை அப்படி மனதிருப்திக்குத் தன்னும் விதண்டாவாதக் கணக்குக் காட்டவும் இடம் இருக்காது என்றே கூறப்படுகின்றது. வாக்களிக்கும் தகுதி உள்ள 47 நாடுகளில் அரைவாசிக்கு மேல் – அதாவது 24 நாடுகள் – இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கும் சூழலே இருப்பதாகக் களத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இன்னும் நான்கு நாள்களில் முடிவு தெரிந்து விடும்.

# அரச ஊழியர்களின் சம்பளம் குறைப்பு செய்திகளில் எந்த உண்மையுமில்லை!

## நிதி இராஜாங்க அமைச்சர் கருத்து

அரச ஊழியர்களின் சம்பளம் அடுத்த மாதம் முதல் குறைக்கப்படும் என பரப்பப்படும்செய்தியில்எவ்விதஉண்மையும் இல்லை என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களைத் தூண்டி விடும் இத்தகைய செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

மேலும் அரசாங்கம் அவ்வாறானதொரு தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை என்றும் அரச ஊழியர்களின் தொழிலைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகக் கருதப்படும் எனவும் அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# இலங்கைத் தோட்ட சேவையாளர் சங்கத்தினரால் சம்பள உயர்வுகோரி தலவாக்கலையில் போராட்டம்!









70 சதவீத சம்பள உயர்வைக்கோரி இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தினரால் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

தலவாக்கலை நகரில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் நாடு தழுவிய ரீதியில் உள்ள இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர்.

மேற்படி சங்கத்தின் தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர் உள்ளிட்டோரின் பங்கேற்புடன் தலவாக்கலை மல்லியப்பு கோவில் சந்தி பகுதியில் ஆரம்பமான பேரணி, தலவாக்கலை நகரை வந்தடைந்து, அங்கு பாரிய ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சம்பள உயர்வு மற்றும் தொழில்சார் சலுகைகளை வலியுறுத்தும் பதாதைகளைத் தாங்கியவாறு சங்க உறுப்பினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

2019 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட கூட்டு ஒப்பந்தம் 30 ஆம் திகதியுடன் காலாவதியானது, இந்நிலையில்தற்போதைய வாழ்க்கைச் சுமைக்கேற்ப 70 வீத சம்பள உயர்வு வேண்டுமென இலங்கை தோட்ட சேவையாளர் சங்கம் வலியுறுத்துகின்றது.

எனினும், 24 வீத சம்பள உயர்வை மூன்று கட்டங்களாக வழங்குவதற்கு முதலாளிமார் சம்மேளனம் முன்வந்துள்ளது. இதனை ஏற்க மறுத்தே, தமது கோரிக்கை ஏற்கப்பட வேண்டும் என வலியுறுத்தி போராட்டம் இடம்பெறுகின்றது.

தோட்டக் கம்பனிகளின் லாபம் மும்மடங்காக அதிகரித்துள்ள நிலையில், இந்த சம்பள உயர்வை வழங்கக்கூடியதாக இருக்கும் என போராட்டக்காரர்கள் சுட்டிக் காட்டினர்.

மலையக மக்கள் முன்னணி உட்பட மலையகத்திலுள்ள தொழிற்சங்கங்கள் பல இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# 12 மார்பகப் புற்றுநோயாளர்கள் நாளொன்றுக்கு பதிவாகின்றனர்

இலங்கையில் நாளொன்றுக்கு 12 மார்பக புற்றுநோயாளர்கள் பதிவாகி வருகின்றனர் எனத் தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு திட்டம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் கடந்த இரண்டு தசாப்தங்களில் மார்பக புற்றுநோயாளிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக விசேட வைத்திய நிபுணர் ஹசரேலி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு மாதத்தை முன்னிட்டு, உள்ளூர் அளவில் மார்பக புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது,.

மேலும் அடையாளம் காணப்பட்ட நோயாளிகளை சிகிச்சைக்கு அனுப்பவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வைத்தியர் ஹசரேலி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு
ஞாயிற்றுக்கிழமை
02.10.2022

# இந்தோனேசிய உதைபந்தாட்டப் போட்டியில் வெடித்த வன்முறையில் 129 பேர் பலி: 180 பேர் வரை படுகாயம்!








இந்தோனேசியாவில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியொன்றில் ஏற்பட்ட வன்முறையில் 129 பேர் உயிரிழந்துள்ளன்னர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தோனேசியாவின் கிழக்கு ஜாவாவில் மலாங் மாகாணத்தில் உள்ள கஞ்சுருஹான் மைதானத்தில் நேற்றையதினம் உதைபந்துப் போட்டி நடந்தது. அதில் உள்ளூர் அணியான அரேமா மற்றும் பெர்செபயா சுரபயா போட்டியிட்டன. இப்போட்டியில் அரேமா அணி 2-3 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தது. சொந்த மண்ணில் தங்கள் அணி தோல்வியடைந்ததைத் தாங்கிக்கொள்ள முடியாத அரேமா அணியின் தீவிர ரசிகர்கள், கடும் கோபமடைந்தமையுடன், அந்தச் சேற்றம் வன்முறையாக மாறியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. உதைபந்துப் போட்டியில் தங்கள் அணி தோல்வியடைந்ததை அடுத்து ஆயிரக்கணக்கான ரசிகர்கள் ஆடுகளத்திற்குள் புகுந்தனர். அப்போது களத்தில் இருந்த பல அரேமா வீரர்கள் தாக்கப்பட்டனர். இதை கட்டுப்படுத்த மக்கள் கூட்டத்தின் மீது பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியமையை அடுத்து அங்கு கூட்ட நெரிசல் ஏற்பட்டது. கலவரம் மற்றும் கூட்ட நெரிசலில் சிக்கி பலர் படுகாயமடைந்தனர்.

சுமார் 180 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். பாதிக்கப்பட்டவர்களில் பலர் அதிக நெரிசல் மற்றும் மூச்சுத் திணறல் ஆகியவற்றால் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்று நேரில் பார்த்தவர்கள் கூறினர். உயிரிழந்தவர்களில் இருவர் பொலிஸ் அதிகாரிகள்.34 பேர்

மைதானத்திற்குள் உயிரிழந்தனர், மீதமுள்ளவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை

பலனின்றி உயிரிழந்தனர். இதனால் அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவுகின்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# புளோரிடாவையே புரட்டிப் போட்டது 'இயான்' சூறாவளி!

## இதுவரை 30பேர் பலி..!!



வாஷிங்டன், ஒக்.02


அமெரிக்க வரலாற்றின் மிக மோசமான புயல்களில் ஒன்றாகக் கருதப்படுகிற 'இயான்' புயல், அந்த நாட்டின் புளோரிடா மாகாணத்தை தாக்கியது. இந்தப்புயல், 4 ஆம் வகைப் புயலாக கேயோ கோஸ்டா அருகே பெரும் மழையைக் கொண்டு வந்தது.

பல நகரங்கள் இந்தப் புயல மற்றும் வெள்ளம் காரணமாக வெள்ளக்காடாக காட்சி அளிக்கின்றன. மணிக்கு 150 மைல் வேகத்தில் சூறாவளிக்காற்று வீசியது. இது தீவிரத்தின் உயர்ந்த நிலை என்று சொல்லப்படுகிறது. இது புளோரிடா மாகாணத்தைத் தாக்கிய பின்னர் மெதுவாக வலுவிழந்து 2 ஆவது வகைப் புயலாக தரம் குறைந்ததாக தேசிய புயல் மையம் தெரிவித்தது.

இந்தப் புயலின் விளைவாக புளோரிடா மாகாணத்தில் 22 லட்சத்துக்கும் அதிகமான வீடுகள் இருளில் மூழ்கியமையுடன், மாகாணத்தின் தென்மேற்கு பகுதியில் புயல் மற்றும் பலத்த காற்று வீசுவதால் மின்கம் பிகள் அறுந்து விழுந்து மின்தடை ஏற்படும் என்று அதிகாரிகள் எச்சரித்திருந்தனர். போர்ட் மியர்ஸ் நகரம் உள்பட லீ கவுண்டியில் அவசர நிலையும் ஊரடங்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் அமெரிக்காவின் புளோ ரிடா மாகாணத்தை நிலைகுலைய செய்த இயான்

புயல் தற்போது தெற்கு கரோலினா மாகாணத்தை புரட்டி எடுத்து வருகிறது. இதனிடையே புளோரிடா மாகாணத்தில் இந்த இயான் புயலால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 30 ஆக உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சீனாவுக்கு எதிராகக் கூட்டிணைய அமெ., ஆஸி, ஜப்பான் கங்கணம்!



வொஷிங்டன்,ஒக்.02

அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் பாதுகாப்புத் துறை மந்திரிகள் இடையே முத்தரப்பு பேச்சுவார்த்தை அமெரிக்காவில் பசிபிக் பிராந்தியத்திற்கான அமெரிக்க இராணுவத் தலைமையகத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டதில் பங்கேற்ற அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் பாதுகாப்புத் துறை மந்திரிகள், தங்கள் நாடுகளுக்கிடையே இராணுவ ஒத்துழைப்பை அதிகரிக்க ஒப்புக் கொண்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற ஆஸ்தி குரேலியா மற்றும் ஜப்பான் பாதுகாப்புத்துறை மந்திரிகளை வரவேற்ற அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் லாயிட் ஆஸ்டின் கூறுகையில் –

“தைவான் நீரிணையில் சீனாவின் அதிகரித்து வரும் ஆக்ரோஷமான மற்றும் மிரட்டும் நடத்தை குறித்து நாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம்” என்றார்.

ஆஸ்திரேலிய பிரதிநிதியான ரிச்சர்ட் மார்லஸ் கூறுகையில் –

“சீனா தன்னைச் சுற்றியுள்ள உலகத்தை நாம் இதுவரை கண்டிராத வகையில் வடிவமைக்க முயல்கிறது” – என்று தெரிவித்தார்.

மேலும், சீனாவுக்கு எதிராக இணைந்து செயல்பட அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா உறுதி மொழி எடுத்துக்கொண்டன.

பசிபிக் தீவு நாடுகளில் தனது இராஜாங்க உறவுகளைத் தீவிரப்படுத்த அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. அமெரிக்கத் துணை அதிபர் கமலா ஹாரிஸ் கடந்த வாரம் ஜப்பான் மற்றும் தென் கொரியாவுக்கு பயணம் மேற்கொண்டார். அப்போது அவர் கூறுகையில் –

''தைவான் நீரிணை உட்பட ஆசியா முழுவதும் அமெரிக்கா அச்சமோ தயக்கமோ இல்லாமல்

செயல்படும்'' – என்று தெரிவித்தார்.

இப்பகுதியில் சீனாவின் செல்வாக்கை முறியடிக்க அமெரிக்கா தூதரக ரீதியில் தாக்குதலை நடத்தி வருகிறது. அதன்படி கடந்த வாரம் பசிபிக் தீவு நாடுகளுக்கு 810 மில்லியன் டொலர்கள் நிதியுதவியை அமெரிக்கா அறிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# காங்கிரஸ் தலைவர் பதவிக்கு கார்கே - தரூர் நேரடிப் போட்டி



## கே.என். திரிபாதியின் வேட்புமனு நிராகரிப்பு

காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவிக்கு ஒக்டோபர் மாதம் 17 ஆம் தி தேர்தல் நடத்தப்படுகிறது. இந்த தேர்தலில் அக்கட்சியின் மூத்த தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, காங்கிரஸ் எம்.பி. சசி தரூர், ஜார் கண்ட் மாநில முன்னாள் அமைச்சரும், அம்மாநில காங்கிரஸ் தலைவருமான கே.என். திரிபாதி ஆகியோர் நேற்று ஒரே நாளில் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

இந்த நிலையில், வேட்புமனுக்கள் குறித்து ஆய்வு இன்று நடைபெற்றதாக கட்சியின் தேர்தல் ஆணைய தலைவர் மதுசூதன் மிஸ்த்ரி தெரிவித்துள்ளார். இதில் மல்லிகார்ஜுன கார்கே மற்றும் சசிதரூர் ஆகியோரின் மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளன.

வேட்புமனுவை விதிமுறைகளின் படி பூர்த்தி செய்யாததால் கே.என் திரிபாதியின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டதாக மதுசூதன் மிஸ்த்ரி கூறினார்.

அவரது வேட்புமனுத் தாக்கலின் போது மொத்தம் 20 படிவங்கள் பெறப்பட்டன. அவற்றில் நான்கு கையொப்பங்கள் மீண்டும் மீண்டும் போடப்பட்டிருந் தமையால் நிராகரிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

வேட்புமனுக்களை வாபஸ் பெறுவதற்கான ஒக் டோபர் 8 ஆம் திகதி கடைசிநாள். அன்று மாலை 5 மணிக்கு இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும். தற் போதைய நிலையில் காங்கிரஸ் கட்சி தலைவர் பத விக்கு மூத்த தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, சசி தரூர் இடையே நேரடிப் போட்டி உறுதியாகி உள்ள நிலையில், 8 ஆம் திகதிக்குள் யாரும் வாபஸ் பெறா விட்டால், 17 ஆம் திகதி வாக்குப்பதிவு நடத்தப்படும் என்றும் மதுசூதன் மிஸ்த்ரி கூறியுள்ளார்.

# 2024 நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன் அ.தி.மு.க. அணிகள் ஒன்றிணையுமாம்!

## சசிகலா நம்பிக்கை தெரிவிப்பு



சென்னை,ஒக்.02

அ.தி.மு.க. தொண்டர்களைஐ பொறுத்தவரை கட்சி ஒன்றாக வேண்டும். நான் செல்லும் இடங்க ளில் எல்லாம் அதனைத்தான் தொண்டர்கள் வெளிப்படுத்துகிறார்கள்.

- இவ்வாறு சென்னையில் சசிகலா தெரி வித்தார்.

சசிகலா சென்னையில் நிருபர்களுக்கு பேட்டி யளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

அ.தி.மு.க.வில் இருந்து பிரிந்த எல்லோரும் ஒன்று என்றே நான் நினைக்கின்றேன். அதனால் தான் நான் யாரையும் பிரித்துப் பார்க்கவில்லை. என்னைப் பொறுத்த வரை எல்லோரும் ஒன்றிணைய வேண்டும் என்பதைத்தான் நான் ஆரம்பத்தில் இருந்தே தெரிவித்து வருகிறேன். 2024 நாடாளுமன்றத் தேர்தலுக்கு இன்னும் காலம் இருக்கிறது. அதற்குள் எல்லோரும் ஒன்றிணையும் சூழ்நிலை வரும். அது மிக விரைவில் நடக்கும். தொண்டர்களை பொறுத்தவரை கட்சி ஒன்றாக வேண்டும். வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அமோக வெற்றி பெற வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடனும், எண்ணத்துடனும் தான் இருக்கிறார்கள். நான் செல்லும் இடங்களில் எல்லாம் அதனைத்தான் தொண்டர்கள் வெளிப்படுத்துகிறார்கள். பொதுச் செயலாளர் பதவி தொடர்பாக சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டு இருப்பது ஓ.பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிசாமி ஆகியோர் நடத்திய பொதுக் குழு தொடர்பாகத்தான். ஆனால் நான் போட்ட வழக்கு ஆரம்ப காலத்திலேயே போடப்பட்டது. அந்த வழக்கு வருகிற 26 ஆம் திகதி விசார ணைக்கு வருகிறது. - இவ்வாறு அவர் கூறினார்.

# புனேவில் சாந்தினி சவுக் மேம்பாலம் விடிகாலை வெடி வைத்துத் தகர்ப்பு!




புனேவில் சாந்தினி சவுக் மேம்பாலம் வெடிவைத்துத் தகர்க்கப்பட்டது.

மாராட்டியம் மாநிலம் புனே நகரில் பழமையான சாந்தினி சவுக் மேம்பாலம் உள்ளது. இது மும்பை - பெங்களூரு தேசிய நெடுஞ்சாலைக்கு இடையே அமைந்திருக்கும் மிக முக்கிய சந்திப்பு பகுதியாகும். இப்பகுதியில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்படுவது வழமை. இதனால் அந்த பாலத்தை இடித்துவிட்டு புதிய பாலம் கட்ட முடிவு செய்யப்பட்டது. அதன்படி, நள்ளிரவு 1 மணி யளவில் 50 மீட்டர் நீளமுள்ள அந்த பழமையான பாலம் வெடி வைத்து 6 வினாடிகளில் தகர்க்கப்பட்டது. பாலம் தரைமட்டமான தும் இடிபாடுகள் அகற்றும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. இந்த பாலத்தை தகர்க்க சுமார் 600 கிலோ வெடிபொருள்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மும்பையைச் சேர்ந்த நிறுவனம், டெல்லியில் அண்மையில் இரட்டைக் கோபுரங்களை தகர்த்து வெற்றிக்கொடி நாட்டியிருக்கும் நிறுவனம்தான், இந்தப் பாலத்தையும் தகர்க்கும் பணியில் ஈடுபட்டது.

# பக்தர்களின் டிராக்டர் கவிழ்ந்ததில் 27 பேர் பலி; மேலும் பலர் படுகாயம்

## உத்தரப்பிரதேசம் கான்பூர் கடம்பூரில் சம்பவம்

கான்பூர்,ஒக்.02

உத்தரபிரதேச மாநிலம் கான்பூர் மாவட்டத்தில் உள்ள கடம்பூர் பகுதியில் பக்தர்களை ஏற்றிச் சென்ற டிராக்டர் கவிழ்ந்ததில் 27 பேர் உயிரிழந் தனர். பலர் படுகாயமடைந்தனர்.

பதேபுராவில் உள்ள சண்டிகாதேவி கோயிலில் தரிசனம் முடித்துவிட்டு, நேற்று அங்கிருந்து பக்தர்கள் டிராக்டர் ஒன்றில் சொந்த ஊர் திரும்பிக் கொண்டிருந்தனர்.

அப்போது நள்ளிரவில் அஹிர்வான் மே ம்பாலத்தில் வேகமாக வந்த லாரி ஒன்று சாலையில் சென்று கொண்டிருந்த டிராக்டர் மீது மோதியது. டிராக்டர் கவிழ்ந்து நீர்க் குழிக்குள் வீழ்ந்ததில் சம்பவ இடத்திலேயே பலர் உடல் நசுங்கி உயிரிழந்தனர்.

இது குறித்து தகவல் அறிந்து அப்பகுதிக்கு விரைந்து சென்ற பொலிஸார் மற்றும் அதிகாரிகள் மீட்புப்பணியில் ஈடுபட்டனர்.

அஹிர்வான் மேம்பாலத்தில் நேற்று இரவு இந்த விபத்து நடைற்றுள்ளது. பொலிஸ் தரப்பில் கூறுகையில் -

மீட்புப் பணிகள் நிறைவடைந்துள்ளன. இந்த விபத்தில் மொத்தம் 27 பேர் உயிரிழந்தனர் மற் றும் பலர் காயமடைந்துள்ளனர். காயமடைந்த வர்கள் ஹாலட் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். விசாரணை நடந்து வருகிறது.- என்றனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் 26 உடல்களுக்கும் பிரேதப் பரிசோதனை செய்யப்பட்டு, உடல்கள் சொந்த ஊருக்கு அனுப்பி வைக்கப்பட்டன என்று கான்பூர் மாவட்ட கலெக்டர் இன்று காலை தெரிவித்தார்.



# மகாத்மா காந்தி நினைவிடத்தில் பிரதமர் மோடி மலர் தூவி அஞ்சலி



மகாத்மா காந்தி நினைவிடத்தில் இந்தியப் பிரதமர் மோடி மலர் தூவி மரியாதை செலுத்தினார். காந்தியின் பிறந்த நாளையொட்டி மகாத்மா காந்தியின் பஜனை பாடல்கள் நிகழ்ச்சியும் நடந்தது.

இந்திய தேசத்தந்தை மகாத்மா காந்தியின் பிறந்த நாள் இன்று இந்தியா முழுவதும் உற்சாகமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

இதையொட்டி டெல்லி ராஜ்கோட்டில் உள்ள மகாத்மா காந்தி நினைவிடத்தில் மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் பிரதமர் நரேந்திர மோடி, துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கர், நாடாளுமன்ற சபாநாயகர் ஓம்பிர்லா மற்றும் முக்கிய தலைவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். மகாத்மா காந்தியின் பஜனை பாடல்கள் நிகழ்ச்சியும் நடந்தது. இதில் பிரதமர் மோடி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# திருகோணமலைக் காணிகள் பகிந்தளிக்கும்போது மாவட்ட மக்களுக்கும் இடமளிக்கப்படுவது அவசியம்

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வற்புறுத்து






(ஹஸ்பர்)

அபிவிருத்தித் திட்ட முன்மொழிவுகள் மூலம் காணிகள் பகிர்ந்தளிக்கப்படும்போது மாவட்ட மக்களுக்கும் குறித்த காணி கிடைக்கப்பெறலை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான கபில நுவன் அத்துக்கோராள தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் கடந்த வியாழன் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் –

திருகோணமலைமாவட்டத்தில்பிறமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் பல அபிவிருத்தித் திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பித்து காணிகளை பெற்றுக்கொள்கின்றார்கள். இருப்பினும் குறித்த காணிகள் அபிவிருத்தி செய்யப்படாமல் வெற்றுக்காணிகளாகவும் காடுகள் வளர்ந்தும் காணப்படுகின்றன. இவற்றை அனுமதிக்க முடியாது. அக்காணிகளுள் அதிகமானவற்றுக்கு அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டிய குத்தகை கட்டணம் செலுத்தப்படாமல் உள்ளது. தற்போது நாடு முகங்கொடுக்கும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மாவட்டத்தில் பயிர் செய்ய முடியுமான காணிகளை இனங்கண்டு காணியற்ற மக்களுக்கு அவற்றை வழங்க வேண்டும். இதன் மூலம் உணவுற்பத்தியை மேம் படுத்தக்கூடியதாக அமையும் என்று அவர் தெரிவித்தார்.

மூதூர் ஆதிவாசிகளின் காணிப்பிரச்சினைகள் குறித்து இதன்போது ஆராயப்பட்டது. மூதூர் ஆதிவாசிகளின் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன என அந்த ஆதிவாசிகளால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. எனவே இப்பிரச்சினை குறித்து ஆராய்தல் வேண்டும். இதற்காக விசாரணைக்குழுவொன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. உரிய விசாரணைகளை மேற்கொண்டு குறித்த செயற்பாட்டை விரைவாக மேற்கொள்ளுமாறு இதன்போது கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்தார்.

உணவுபாதுகாப்பு மற்றும் போசாக்கு தொடர்பில் ஜனாதிபதிதலைமையில் தேசிய குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பொறிமுறையில் மொத்தமாக 07 குழுக்கள் உள்ளன. தற்போது மாவட்டத்தில் 230 கிராமியக் குழுக்களும் 14 பிரதேச குழுக்களும் மாவட்டக்குழுவும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. மாவட்டத்தில் எந்தவொரு குடிமகனும் பசியுடன் இருக்க முடியாது. எந்தவொரு பிள்ளையும் போசாக்கின்மையால் வாடக்கூடாது. அவ்வாறான ஒரு நிலையை ஏற்படுத்திக்கொள்ளல் வேண்டும். இந்நிலையை ஏற்படுத்துவது இக்குழுக்களின் நோக்கமாக அமையப்பெற்றுள்ளது. கிராமிய ரீதியாக குறித்த தகவல்களை பெற்றுக்கொள்ளும் தரவுத்தள கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்படவுள்ளது. மேலும் பயிர் செய்யக்கூடிய காணிகளை இனங்கண்டு அவற்றில் பயிர்செய்ய முற்படுவதன் மூலம் உணவுற்பத்தியை மேம்படுத்திக்கொள்ள முடியும் என இதன்போது திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என். ஜயவிக்ரம தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் வேதத்தீவு பிரதேசத்தில் செயற்படுத்தப்படும் படகுப்பாதை புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளதுடன் இதற்காக 30 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. மேலும் திருகோணமலை மாவட்டத்தில் இவ்வருடம் 972 வேலைத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இதற்காக 203.36 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. அதேபோல் கிழக்கு மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின் கீழ் 56 வேலைத்திட்டங்கள் இவ்வருடம் நிறை செய்யப்பட்டுள்ளன. இதற்காக 140.96 ரூபாய் செல விடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

இம்முறை பெரும்போக பயிர்ச்செய்கைக்காக ஒரு ஏக்கருக்கு 30 லீட்டர் டீசலை விவசாயிகளுக்கு வழங்க இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

முத்து நகர் பிரதேசத்திற்கு நடமாடும் வைத்திய சேவையை வழங்குமாறு கோரப்பட்ட கோரிக்கைக் கமைய அப்பிரதேச மக்களுக்கு அடுத்த வாரம் முதல் அந்த நடமாடும் வைத்திய சேவையை வழங்க நடவடிக்கை எடுப்பதாக இதன்போது திருகோணமலை பிராந்திய வைத்தியசேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

மாவட்டத்தில் இளைஞர்கள் மத்தியில் அதிகரித்து-வரும் போதைப்பொருள் பாவனையை ஒழிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் அவசியம் குறித்து இதன்போது கிழக்கு மாகாண ஆளுநர் தெரிவித்தார்.

விவசாயம், காணி, கால்நடை, வனஜீவராசிகள் மீன்பிடி, வனப்பாதுகாப்பு,போக்குவரத்து மற்றும் கல்வி உட்பட பல விடயங்கள் இதன்போது ஆராயப்பட்டன.

இந் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக்,உள்ளூராட்சி மன்றத்தலைவர்கள், கிழக்கு மாகாண பிரதம செயலாளர் துசித பி வணிகசிங்க, கிழக்கு மாகாண அமைச்சின் செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், முப்படை மற்றும் பொலிஸார் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## ஊடகவியளாளர் விருது வழங்கல்



KDMC Nenasala Training Centre Kalmunai யின் 05 ஆவது பட்டமளிப்பு விழா கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நிறைவேற்றுப் பணிப்பாளர் எஸ்.எம் .ஹாஜா தலைமையில் கடந்த 24 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது.

இப்பட்டமளிப்பு விழாவில் சுமார் 85 பட்டதாரி மாணவர்கள் பல்வேறு துறைகளிலும் பட்டம் பெற்றனர். பிராந்தியத்தில் ஊடகத்துறையில் சிறந்த பங்களிப்பை வழங்கி வரும் பாறூக் ஷிஹான் சிறந்த ஊடகவியளாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இப்பட்டமளிப்பு விழாவிற்கு கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் முன்னாள் பிரதிப் பணிப்பாளரும் கல்முனை அபிவிருத்தி முகாமைத்துவ சபையின் தலைவருமான வைத்திய கலாநிதி ஏ.எல்.எம் நஸீர் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

இப்பட்டமளிப்புவிழாவில்பட்டதாரி மாணவர்கள், பெற்றோர்கள், அதிதிகள் என பலரும் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கதாகும்.

## கர்ப்பிணித் தாய்மார்களுக்கு போசாக்கு உணவுப் பொதிகள்




வறுமைக் கோட்டின் கீழ் வாழும் அரச வைத்தியசாலை கிளினிக் செல்லும் கர்ப்பிணிப் பெண்களின் போசாக்கினை மேம்படுத்தும் நோக்கோடு போசாக்குமிக்க உணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு ஹட்டன் நசனல் வங்கியினர் தாமாகவே முன்வந்து 'உங்களுக்காகவே நாம்' எனும் தேசிய போசாக்குத் திட்டத்தினூடாக தலா ரூபாய் 5,000 பெறுமதியான போசாக்கு உணவுப் பொதியும் மற்றும் ரூபாய் 1,000 பெறுமதியான பண வவுச்சரும் 25 பேருக்கு வழங்கி வைக்கப்பட்டது. மூன்று மாதங்களுக்கு ஒரு முறை இவ்வுதவிகள் வழங்கப்படவுள்ளன.

வாழ்க்கைச்செலவு அதிகரித்துள்ள நிலையில் சுகாதாரத் திணைக்களத்தில் ஆலோசனைக் கமைய இத்திட்டமானது இலங்கையின் 10 பிராந்தியங்களிலும் நடைபெற்று வருவதோடு கிழக்குப் பிராந்தியத்தில் அம்பாறை, திருகோணமலை, மூதூர் மற்றும் மட்டக்களப்பு பிரதேசங்களில் 100 பேருக்கு வழங்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.உதயகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சுகுணன் குணசிங்கம், மண்முனை வடக்கு உதவிப் பிரதேச செயலாளர் சியாகுள் ஹக், ஹட்டன் நசனல் வங்கியின் விற்பனைப் பிரிவுபிராந்தியமுகாமையாளர்என்.கேதீஸ்வரன், கடன் பிரிவின் தலைமை முகாமையாளர் ஜே.சத்தியசீலன், மட்டக்களப்பு கிளையின் முகாமையாளர் ஏ.நிர்மலகுமார், சுற்றுச்சூழல் தொழில் சார் சுகாதாரப் பிரிவு வைத்தியர் தர்சினி முருகுப்பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டு போசாக்கு உணவுப் பொதிகளையும பண வவுச்சர்களையும் வழங்கி வைத்தனர்.

# யாழில் கடந்த 9 மாதங்களில் கொவிட் தொற்றால் 8 பேர் பலி!



## கேதீஸ்வரன் தகவல்

யாழ் மாவட்டத்தில் இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 2 ஆயிரத்து 548 கொரோனா நோயாளர்கள் உறுதி செய்யப்பட்டதுடன் எட்டு மரணங்களும் பதிவாகியுள்ளன என யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட விசேட நுளம்புக் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில் –

கடந்த சில மாதங்களாக யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதுடன் அதிக மரணங்களும் பதிவாகின்றன.

கொரோனாத் தொற்று காரணமாக மாகாணங்களிற்கிடையே ஏற்படுத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட போக்குவரத்து காரணமாக கடந்த இரண்டு வருடங்களிலும் டெங்கு நோயாளர்கள் மற்றும் பதிவாகிய மரணங்களின் எண்ணிக்கையும் ஒப்பீட்டளவில் மிகக் குறைவாகும்.

யாழ். மாவட்டத்தில் இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 2 ஆயிரத்து 548 நோயாளர்கள் உறுதி செய்யப்பட்டதுடன் எட்டு மரணங்களும் பதிவாகியுள்ளன.

கடந்த ஐந்து வருடங்களில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும் மரணங்களின் எண்ணிக்கை குறைவாகக் காணப்பட்டது.

இந்த வருடம் நடந்த மரணங்களில் பெரும்பா லானவை நோயாளர்கள் தாமதமாக வைத்திய ஆலோசனையை நாடியதாலேயே நிகழ்ந்துள்ளன.

எனவே காய்ச்சல் போன்ற டெங்கு நோய்க்கான அறிகுறிகளுடையவர்கள் உடனடியாக தகுதி வாய்ந்த மருத்துவர் ஒருவரையோ அல்லது வைத்தியசாலைகளையோ நாடி உரிய வைத்திய ஆலோசனையைப் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி அரச அதிபர் தலைமையில் யாழ்.மாவட்ட டெங்கு தடுப்பு கண்காணிப்பு குழு கூட்டம் நடை பெற்றது.

அவ்வாறே எதிர்வரும் வாரத்தில் பிரதேச மட்ட டெங்கு தடுப்பு கண்காணிப்பு குழு கூட்டங்கள், பிரதேச செயலர் பிரிவு வாரியாகவும் கிராமிய மட்டங்களில் கிராம சுகாதார மேம்பாட்டு குழு கூட்டங்களும் இடம்பெறும்.

இனி வரும் மாதங்களில் யாழ். மாவட்டம் பருவப்பெயர்ச்சி மழையை அதிகம் பெறும் காலமாகும். எனவே இம்மாதங்களில் இனங்காணப்படும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம்.

பருவப்பெயர்ச்சி மழையுடன் ஏற்படக்கூடிய டெங்கு பெருந்தொற்றைத் தடுப்பதற்கு வாராந்தம் உறுதி செய்யப்படும் டெங்கு தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும்.

எனவே நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களை டெங்கு பரவுவதற்கான அதிக ஆபத்துள்ள பிரதேசங்களாகக் கருத்தில் கொண்டு எதுவித கால தாமதமும் இன்றி சமூக பங்களிப்புடன் நுளம்புகள் உருவாகும் மூலங்களை அழிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

இதனைக் கருத்தில் கொண்டு மத்திய சுகாதார அமைச்சு நாடு முழுவதும் அதிக ஆபத்துள்ள பிரதேச செயலர் பிரிவுகளில் விசேட நுளம்புக் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுக்கின்றது. இது தொடர்ச்சியாக மூன்று நாள்கள் இரண்டு கட்டங்களாக நடைபெறும்.

முதலாவது டெங்கு கட்டுப்பட்டு நிகழ்ச்சித் திட்டம் ஒக்ரோபர் 3 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை சங்கானை, கரவெட்டி, ஊர்காவற்துறை, நல்லூர் சண்டிலிப்பாய், மற்றும் உடுவில் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில்; முன்னெடுக்கப்பட உள்ளது அவ்வாறே எதிர்வரும் ஒக்ரோபர் 12 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை சாவகச்சேரி, கோப்பாய், யாழ்ப்பாணம், பருத்தித்துறை, மற்றும் தெல்லிப்பழை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இடம்பெறவுள்ளது.

இதன் போது சுகாதார உத்தியோகத்தர்கள் பாதுகாப்புப் படையினர். பொலிஸ், கிராம உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் அடங்கிய குழுக்கள் அதிக டெங்கு ஆபத்து உள்ளதென அடையாளங் காணப்பட்டுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ள அரச தனியார் நிறுவனங்கள், மத ஸ்தலங்கள், பாடசாலைகள், உயர்கல்வி நிறுவனங்கள் வீடுகள், தொழிற்சாலைகள் , கட்டடநிர்மாணங்கள் நடைபெறும் இடங்கள் மற்றும் மீன் பிடி துறைமுகங்கள் என்பனவற்றுக்கு நுளம்புகள் பெருகக்கூடிய ஆபத்துள்ள இடங்களை அடையாளம் காணும் நோக்கத்துடன் பரிசோதிப்பதற்காக வருகை தருவர்.

எனவே உங்கள் வீட்டின் உட்பகுதிகளிலும், வெளிச் சுற்றாடலிலும் டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் உள்ளனவா என்பதை கிரமமாக பரிசோதனை செய்வதுடன் அவற்றை அப்புறப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கவும்.

அரச தனியார் நிறுவனங்களின் பொறுப்பதிகாரிகள் தமது நிறுவனங்களில் கூட்டு முயற்சியாக சிரமதான பணிகளை முன்னெடுக்கவும்.

மேலும் கைவிடப்பட்ட காணிகள், வீடுகள் என்பனவற்றின் உரிமையாளர்கள் அவற்றைத் துப்புரவாகப் பேணுமாறு கேட்டுக்கொள்ளப்படுவதுடன், அவ்வாறான இடங்களில் டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய ஆபத்துகள் காணப்படுமாயின் உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

டெங்கு நோயிலிருந்தும் அதனால் ஏற்படக்கூடிய மரணங்களில் இருந்தும் எம்மையும் எமது சமூகத்தையும் பாதுகாக்க ஒன்றிணைவோம் – என்றுள்ளது.

# இந்திய தூதர் கோபால் பாக்லே மட்டு. இ.கி.மினுக்கு விஜயம்!











(வி.ரி.சகாதேவராஜா)

இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே நேற்று சனிக்கிழமை பகல், மட்டக்களப்பு இராமகிருஷ்ண மின் சிறுவர் இல்லத்துக்கு விஜயம் செய்தார்.

இராமகிருஷ்ண மின் சிறுவர் இல்ல முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷயானந்த ஜீ மகராஜ், உதவி முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் ஆகியோருடன் இல்ல மாணவர்கள் இந்தியத் தூதுவரை வரவேற்றார்கள் .

அவர் நேரடியாக இல்லத்தில் உள்ள ராமகிருஷ்ணர் ஆலயத்துக்கு சென்று நவராத்திரி விசேட பூஜையில் கலந்து கொண்டார்.

அவர் இல்ல மாணவர்கள் முன்னிலையில் துர்க்கா தேவிக்கு புஷ்பாஞ்சலி செலுத்தினார்.

ஒரு மணி நேரம் அங்கு அவர் அனைத்தையும் சுற்றிபார்த்து பின்பு சுவாமிகளுடன் கலந்துரையாடினார்.

அவர் நவராத்திரி விரதத்தை கடைப்பிடிப்பதனால் ஏதும் அருந்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மின் பணிகளை அவர் கேட்டறிந்து புகழாரம் சூட்டினார். பாராட்டி நன்றியும் தெரிவித்து விடைபெற்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.10.2022இல் வெளியிடப்பெற்றது.